பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஜூன் 2014 ❁ விலை ரூ. 15/-



வள்ளிதெய்வானை உடனுறை இராஜமுருகன்

கொருக்குப்பேட்டை, சென்னை

# உள்ளம் கசிந்து உருகிப் பாடினால் முருகன் அருள் உண்டு

மானிடப் பிறப்பு மகத்தானது தான். ஆனால் அதில் முழுமை பெற்றவர் சிலர்தானே! உடல், உள்ளம், ஆன்மா, மூன்றிலும் வளர்ச்சி பெற்று முதிர்ந்தவர்களையே முழு மனிதர்களாகக் கொள்ள முடியும். உடல் வளர்ச்சிக்கு உணவும், உடற் பயிற்சியும் வேண்டும். உள்ள வளர்ச்சிக்கு கல்வியும், சிந்தனையும் வேண்டும். ஆன்மிக வளர்ச்சிக்கு அரிய கடவுட் கொள்கையும், பெரிய சமய நெறிகளும் வேண்டும். நாட்டில் உடல் வளர்ச்சியுள்ளோர் நிறைய உண்டு. உள்ள வளர்ச்சி உள்ளவர்கள் கூட ஓரளவு உண்டு. ஆனால் செந்நெறியும் செழும் சமயமும் போற்றி ஏத்தும் புண்ணிய சீலர்கள் சிலரே! ஆண்டவனையும், அவன் பாவித்த அருளையும் அண்டியவர் மிகச் சிலரே. சுருங்கக் கூறின், நெறியோடு கூடிய உருப்படியான ஒரு சமுதாயத்தை உருவாக்க ஆன்மிகம் அடித்தளமாக அமைகிறது என்றால் மிகையாகாது.

நம்முடைய குருநாதரான ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சிறந்த ஒரு ஞானி. இன்றைக்குச் சுமார் 85ஆண்டுகளுக்கு முன்பு ஜீவன் முத்தராய் வாழ்ந்து குகசாயுச்சியம் அடைந்தவர். இவர் அறுமுகன் ஒருவரையே புகழ்ந்து 6666 பாடல்கள் பாடியுள்ளார். இவர் அருளிய பாடல்கள் அத்தனையும் மகா மந்திரங்கள் ஆகும். இவற்றில் வேதங்களும், உபநிடதங்களும் உள்ளடங்கியுள்ளன. சுவாமிகளுடைய முழுப்பெயர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆகும். இவர் இயற்றி அருளிய பெருவேண்டுகோள் என்பது ஒரு முக்கியமான பதிகமாகும். இப்பதிகத்தில் சுவாமிகள் பல்வேறு அடியார்களுக்கு முருகன் அருள்பாலித்திருப்பதை வருணித்து, “இத்துணை சிறப்பு வாய்ந்த முருகா! என்னை நீ மறக்கக் கூடாது” என்று நெஞ்சம் கசிந்து உருகிப் பாடியுள்ளார்கள்.

இப்பதிகத்தில் விண்ணுலக வேந்தன் இந்திரன் மகன் சயந்தனுக்கும், மண்ணுலக மன்னன் நல்லியக் கோடனுக்கும் கனவில் கந்தவேள் காட்சியளித்துக் காத்த திறத்தைக் காண்கிறோம். நனவுக் காட்சியாகக் கருணை வடிவேலன் அருளிய அற்புதத்தை முருகா! முருகா! என்று கூறிய வண்ணமிருந்த முருக பக்த சிரோன்மணியான அம்மையார் மூலமும், பஞ்சாமிர்த வண்ணம் கேட்ட முத்தம்மை மூலமும் அறிகிறோம். ஐம்பெருங் குற்றங்கள் புரிந்ததோடு குருவின் சொற்கேளாத மாபாதகனும் மனந்திருந்தி வேண்டியபோது சிவகுருநாதன் உய்வித்தருளிய மாட்சியை உணர்கிறோம். மெய்யடியாரைத் தேடி வருவான், அவரளிக்கும் உணவை உண்பான், உபதேசம் புரிவான், பகைவரால் வரும் இடரைக் களைவான், தொழுநோயையும் போக்கிப் பொன்னுடல் ஈவான் என்னும் கருணைத் திறத்தை அருணகிரிநாதர் வாழ்க்கை அனுபவத்தால் தெரிகிறோம். சுவாமிகள் பொற்பேழையுள் நவரத்தினங்களைக் குவித்து வைத்தாற் போன்று இப்பதிகத்துள் பத்து அருளற்புத நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறியுள்ளார்கள்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருள் நெறி மார்க்கத்தில் என்னை ஈடுபடுத்தியவர் பேராசிரியர் முனைவர் ப.இராமன் அவர்கள். ஐயா அவர்கள் பல பாடல்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதிய உரையைத் தான் இங்கே உங்களுக்குக் கொடுத்துள்ளேன்.

நம்முடைய குருநாதரான அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன்

சிவத்தமிழ் குகமணி **தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526



ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இயற்றி அருளிய 6666 பாடல்களில் 6 ஆவது மண்டலத்தில் 5 ஆவது அத்தியாயமான பலதிறப் பொருட்காண்டம் என்ற தலைப்பின் கீழ் 6ஆவது பதிகமாக பெருவேண்டுகோள் கலிவிருத்த (இசை) மாகவும், இரண்டாமெழுத்தொன்றிய சிறப்புடைய அடியெதுகை என்ற இலக்கணத்தில் இயற்றியுள்ளார்கள். அப்பாடல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாடல் சுவாமிகளால் துர்மதி வருஷம் மார்கழி மாதம் 28ஆம் தேதி புதவாரம் அன்று இயற்றப்பட்டது.

**பெருவேண்டுகோள்**
**கலிவிருத்தம் (இசை)**

கண்ணாயிர முடையான்முளை கனவிற்சர ணார்கண்
எண்ணாயிர முடையூர்தியி ருந்தேசிறை மீட்பேன்
உண்ணாய்துய ரென்றோதிய வுடையாயொளிர் பூவல்
வண்ணாவயின் மன்னாவெனை மறவேலெனை மறவேல்

அறிவேறுசை கீசவ்விய னார்சீடன டங்கா
நெறியாலனை யைம்பாதக நெடிலைக்களை யிறைவா
பொறியாயரு ணிலையாயதி புனிதாவயின் முதல்வா
வறிதேதுமில் குமராவெனை மறவேலெனை மறவேல்

முருகாவயின் முருகாவென மொழியும்மொரு மாதின்
ஒருகாதல னவள்கையினை யுதிரம்பெரு கரிகால்
அருளாலது வளரும்படி யயர்தண்ணளி யாளா
மருமாலைகொண் மார்பாவெனை மறவேலெனை மறவேல்

வெறிவண்டிசை பாடும்பொழில் வேலூரினை யாளும்
பொறிதங்கிய புகழானலி யக்கோடனு றங்கும்
நெறிவந்தலர் வேலேவுதி நெரியும்பகை யென்ற
மறியின்சுதை தலைவாவெனை மறவேலெனை மறவேல்

திங்கட்சடை யவன்மங்களை திகழுஞ்சிவ கோச
மங்கைக்கும ரேசற்றொழு தான்வைகிட னெய்தி
அங்கைக்கிடு வால்வல்சிய யின்றோதிம றைந்த
மங்குற்பகை மணியேயெனை மறவெலெனை மறவேல்

எளியேனவி றமிழ்மாலையி யம்போர்பொழு தென்முன்
அளியாலது வென்னான்முடி யாதோவென வினவிக்
களியோடுக ரந்தாயிது காறுங்கொள லறியேன்
வளியூரொரு தேராவெனை மறவேலெனை மறவேல்

மாடாடுகள் பல்குந்திரு வளமேவுபி ரப்பைக்
காடாரிட மதினானடி கருதும்பொழு தெதுவும்
ஊடாடலி லாமேயொரு மொழியோதிம றைந்த
வாடாமுக முனியேயெனை மறவேலெனை மறவேல்

உரனந்திய பலவைணவ ருரனார்சிவ நெறியை
நிரல்விஞ்சிய பலநிந்தைசெய் தெற்குந்துயர் தரலைத்
திரன்விஞ்சிய வதிகாரிமு னொழியும்படி செய்தார்
வரமஞ்சிகை முருகாவெனை மறவேலெனை மறவேல்

பரிவாளர்க ளங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென்றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை யிறைவாவெனை மறவேலெனை மறவேல்

முழுநாரொடு புகழ்பாடிய முனிவற்கஞ ரேசெய்
தொழுநோயற வேசெய்தொரு சுகநல்கிய துரையே
கழுகோதியி லமர்வேலவ கருணாகர முருகா
வழுவாவழி முதல்வாவெனை மறவேலெனை மறவேல்

## பாடலின் விளக்கம்

உடம்பிலே ஆயிரம் கண்களை யுடைய இந்திரனின் மகனான சயந்தனின் கனவில், பல்லாயிரம் கண்கள் கொண்ட தோகையை உடைய மயில்மீது எழுந்தருளி யாம் உன்னைச்சிறை மீட்போம், துயரப்படாதே என்று கூறிய இறையவனே! ஒளிவீசும் செம்மேனியுடையவனே! வேலிறைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

ஞானத்தால் மிக்க சைகீசவ்விய முனிவரின் சீடன், ஒருவன் அறநெறி நில்லாமையால் அவனைப் பற்றிய பொய், கொலை, கள், களவு, காமம் ஆகிய ஐம்பெருந் தீவினைகளின் வலியைக் களைந்த இறைவனே! ஞான வடிவனே! அருள் நிலையனே! மிக்க தூய்மையில் விளங்குபவனே! அறியாமை ஏதும் தீண்டாத குமாரப் பிரபுவே! எனை மறவேல்! எனை மறவேல்!

முருகா! வேல்முருகா! என்று கூறும் ஒரு பெண்மணியின் கணவன் அவள் கையைக் குருதி பெருக வெட்டியபோது, அந்தக் கை வளரும்படி அருள்செய்த தண்ணளியுடையவனே! மணமுடைய மாலை அணிந்த திருமார்பினனே! எனை மறவேல்! எனை மறவேல்!

தேனையுண்டு வண்டுகள் இசைபாடும் சோலைகள் உள்ள வேலூரை ஆண்டுவந்த திருமகள் தங்கிய புகழுடைய நல்லியக் கோடன் என்னும் அரசன் உறங்கும்போது அவன் கனவில் எழுந்தருளி வயலில் உள்ள மலர்களையே வேல்களாகக் கொண்டு ஏவு! பகைவர் அழிவர் என்று கூறிய வள்ளிப் பிராட்டியின் தலைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

பிறையணிந்த சடையுடைய சிவபிரானும் அவன் தேவி மங்களேசுவரியும் எழுந்தருளியுள்ள திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்தில் உன்னை வழிபட்ட கார்த்திகைச் சுவாமிகள் இல்லத்தை அடைந்து அவர் உன் கையிலிட்ட தூய உணவையுண்டு அவருக்குக் கூறவேண்டுவன கூறி மறைந்தவனே! இருளாகிய மலத்தின் பகையாய் விளங்கும் மணியே! எனை மறவேல்! எனை மறவேல்!

எளியேன் பாடிய தமிழ்ப் பாடல்களை உன் திருமுன் ஓதிய போது என்முன் தோன்றி நீ விரும்பும் ஆன்மலாபத்தைத் தர என்னால் முடியாதோ என்று அருளோடு வினவி மறைந்தவனே! இதுகாறும் நீ என்னை ஆட்கொள்ளுமுறை அறிகிலேன். காற்றுக் கடவுள் செலுத்தும் ஒப்பற்ற தேரை உடையவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

மாடுகளும் ஆடுகளும் பெருகிவரும் மேலான வளமுடைய பிரப்பன்வலசைக் காட்டில் உன் திருவடியைச் சிந்தித்திருந்த போது எவ்வித ஊடலும் இன்றி எழுந்தருளி ஒருமொழி ஓதி மறைந்த மலர்ந்த முகமுடைய முனியே! எனை மறவேல்! எனை மறவேல்!

பெருமை குலைந்த வைணவர் ஞானம் நிரம்பிய சிவநெறியை எண்ணற்ற நிந்தைகள் செய்து எனக்கும் துயர் தருதலை வலிமையுடைய அதிகாரியால் ஒழியும் படி செய்தவனே! மேன்மையுடைய குண்டலம் அணிந்த முருகனே! எனை மறவேல்! எனை மறவேல்!

திருச்செந்தூரில் அன்பர்கள் ஓதிய பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் அழிவற்ற என் உள்ளம் விரும்பும் இனிமையுடையது என்று உன் அடியவளாகிய முத்தம்மையார் என்னும் மூதாட்டியின்பால் வந்து கூறியருளிய செந்தில் இறைவனே! ஒழுங்கும் பெருமையுமுடைய வேதங்களின் தலைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

நினது திருவடிக்கண் முழு அன்போடு திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாத முனிவரை வருத்திய தொழுநோய் நீங்குமாறு செய்து ஒப்பற்ற பேரின்பத்தை வழங்கிய துரையே! கழுகுமலையில் எழுந்தருளியுள்ள வேலவனே! அருளே திருமேனியாகக் கொண்ட முருகனே! பிழைபடாத நன்னெறிகளின் முதல்வனே! எனை மறவேல்! எனை மறவேல்!

மேற்கண்ட 10 பாடல்களில் 3ஆவது பாடலில் உள்ள கருப்பொருளை மட்டும் நாம் இப்போது காண்போம்.

**விளக்கம்:**

பாண்டிய நாட்டில் உள்ள திருப்பரங்குன்றம் அறுமுகப் பெருமானின் முதற்படை வீடாகும். இங்கு குடைவரைக் கோயிலில் கந்தக் கடவுள் எழுந்தருளியுள்ளார். தெய்வயானையை மணம் செய்து கொண்ட மங்கலமான தலம். இத்தலத்தில் முருகபக்தியில் தன்னை மறந்து தலைவன் திருப்பெயரையே எப்போதும் சொல்லி கொண்டிருக்கும். ஓர் அம்மையார் இருந்தார். அவர் நாவானது இடையறாது முருகா! முருகா! என்று சொல்லிக் கொண்டிருக்கும். ஆனால் அவருடைய கணவனுக்கு இவர் செய்கை பிடிக்கவில்லை.

அவன் "முருகன் பெயரைச் சொல்லாதே, என் பெயரைச் சொல்" என்று கட்டளையிட்டான். அம்மையார் நினைப்பெல்லாம் முருகன் மீதே இருந்ததால் அவன் சொன்ன வார்த்தை அம்மையார் காதில் விழவில்லை. அவர் எப்போதும் போல் முருகா! வேல் முருகா! என்றே சொல்லிக் கொண்டிருந்தார். கணவன் சொன்னபடி செய்யாததால் அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று, அதனால் கையிலிருந்த வாளினால் அம்மையாரின் ஒருகையை வெட்டிவிட்டான். ரத்தம் ஆறாகப்பெருகி ஓடியது. அந்த நேரத்திலும் அவர் வெட்டினதை உணரவில்லை. வலியால் துடிக்கவில்லை. அழுது புரளவில்லை. அவர் எப்போதும் போல் தன்னை மறந்த நிலையில் முருகா! வேல்முருகா! என்றே ஓதிக்கொண்டிருந்தார். தன் அடியார்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு கருணைக்கடலான கந்தவேள் பொறுப்பாரா? உடனே வெட்டப்பட்ட கையை முன்போல் வளரும்படி திருவருள் பாலித்தார். அங்கு கூடியிருந்தவர்களும் அவர் கணவனும் அதிசயிக்கும் படி வெட்டப்பட்ட கை வளர்ந்தது. ஆழ்ந்த பக்தியின் பெருமையும் திருப்பெயரை இடைவிடாது சொல்வதால் விளையும் பயனும் இச்செய்தியால் அறிகிறோம். எத்தகைய துன்பத்தையும் போக்க வல்லது முருகப் பெருமானின் திருப்பெயர்கள். சத்தியமாவது சரவணபவவே என்றார் சுவாமிகள். ஓம் சரவணபவ ஹ்ரீம் என்ற மந்திரத்தை இடைறாது சொன்னால் உலகில் கிடைக்கக்கூடாதது ஒன்றுமில்லை. முருகப்பெருமானுடைய 108 திருப்பெயர்களையும், 1008 திருப்பெயர்களையும் ஓதி அடையும் பயனும், அவற்றை ஓதி அர்ச்சனை செய்யும் பயனும் அளவிடற்கரியன.

**இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்:**

இளைய தலைமுறையினர் இப்பாடலை நாள்தோறும் படித்தால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் பனிபோல் விலகிவிடும். மற்றும் முருகனின் திருநாமத்தையும், ஓம் சரவணபவ ஹ்ரீம் என்ற மந்திரத்தையும் இடைறயாது சொன்னால் உங்களால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை. மேலும் சுவாமிகள் பாடல்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் **www.pambanswamigal.org or www.pambanswamigal.net** என்ற இணைய தளத்தில் சென்றால் கண்டுகளிக்கலாம்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**